**பீப்பிள்ஸ் டிரவல்ஸ் பிறைவேட் லிமிட்டட் - 2023/2024**

**-----------------------------------------------------------------------------**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

பீப்பிள்ஸ் டிரவல்ஸ் பிறைவேட் லிமிட்டட்டின் (“கம்பனி”) 2024 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கை தகவல்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. இந்தக் கணக்காய்வினை மேற்கொள்வதற்கு பொதுத்தொழிலிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்றின் உதவியை நான் பெற்றிருந்தேன்.

கம்பனியின் 2024 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி

அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு நோக்கெல்லை**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும்,

எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.5.1 செலுத்த வேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியின் கொள்கையின் பிரகாரம், மீள்நிதி வருமானம் 2 ஆண்டுகளுக்குள் அறவிடப்படாவிட்டால் மற்றும் வாடிக்கையாளர் மின்னஞ்சல் மூலம் மீள்நிதியை சேகரிப்பதற்கு ஒரு நபரை பரிந்துரைக்கவில்லை என்றால் அல்லது வாடிக்கையாளர் தரப்பிலிருந்து பரிந்துரைக்கப்பட்ட நபரைத் தொடர்பு கொள்ள முடியாவிட்டால் அப்போது அதை இலாபம் மற்றும் இலாபம் மற்றும் நட்டத்திற்கான மாற்றமாக கருத்தில் கொள்ள வேண்டும். எனினும், 2 வருட காலத்திற்கு முன்னர் இடம்பெற்ற கொடுக்கல்வாங்கல்கள் ரூபா 1,596,389 தொகையான செலுத்த வேண்டிய PTL மீள்நிதி கணக்கில் தீர்க்கப்படாமல் அப்படியே இருந்தது. | குறித்துக்கொள்ளப்பட்டது, அடுத்த நிதியாண்டில் சுட்டிக்காட்டப்பட்ட மீள்நிதிகளை இலாபத்திற்கு எடுப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | கம்பனியின் கொள்கையை கடைபிடிப்பதற்கு தேவையான நடவடிக்கையை எடுத்தல். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 32,084,353 தொகையான வரிக்கு முன்னரான இலாபமொன்றாகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 19,096,383 தொகையாகக் காணப்பட்டது. எனவே நிதி விளைவுகளில் ரூபா 12,987,970 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. விற்பனை கிரயத்தில் ரூபா 90,410,529 தொகையான அதிகரிப்பு காணப்பட்ட போதிலும் வருமானத்தில் ரூபா 113,536,807 தொகையான அதிகரிப்பு காணப்பட்டமை இம் முன்னேற்றத்திற்கான காரணங்களாகும்.

### 2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

**2.2.1** மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டின் போது கம்பனியின் நிதி விளைவுகளை பின்வரும் அட்டவணை சுருக்கமாகக் குறிப்பிடுகிறது.

| விபரம் | 2023/2024 | 2022/2023 | 2021/2022 | 2020/2021 | 2019/2020 |
|---|---|---|---|---|---|
| வருமானம் (ரூபா) | 189,394,158 | 75,857,351 | 13,948,732 | 1,246,459 | 120,088,342 |
| முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது அதிகரிப்பு/ (குறைவு) % | 149.67 | 443.83 | 1,019.07 | (98.96) | |
| சேவைக் கிரயம் (ரூபா) | 122,322,989 | 31,912,460 | - | - | 88,514,075 |
| முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது அதிகரிப்பு/ (குறைவு) % | 283.31 | 100.00 | 0 | (100.00) | |
| வரிக்கு முன்னரான இலாபம் (ரூபா) | 32,084,353 | 19,096,384 | (6,500,086) | (19,236,130) | (9,152,378) |
| முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது அதிகரிப்பு/ (குறைவு) % | 68.01 | 393.79 | 66.21 | (110.18) | |

**2.2.2** முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் பகுப்பாய்வு அதிகரிப்பு அல்லது குறைவடைதல் சதவீதத்துடன் கீழே தரப்பட்டுள்ளன.

| **விபரம்** | **வேறுபாட்டு தொகை அதிகரிப்பு/ (வீழ்ச்சி) (ரூபா)** | **வேறுபாடு %** | **வேறுபாட்டிற்கான காரணங்கள்** |
|---|---|---|---|
| வருமானம் | 113,536,807 | 149.67 | சர்வதேச பயணச்சீட்டுக்கள் மற்றும் வாடிக்கையாளர் பயணத்திற்கான அதிகரித்த தேவை விமான பயணச்சீட்டு விற்பனை எல்லைகள் மற்றும் வெளிச்செல்லும் ஓய்வு பயணிகளின் விற்பனையை உயர்த்தியுள்ளது. |
| விற்பனை கிரயம் | 90,410,529 | 283.31 | 2023-2024 நிதியாண்டில் செயற்படுத்தப்பட்ட சுற்றுப்பயணங்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு. |
| நிர்வாக செலவினங்கள் | 8,510,286 | 27.13 | 2023-24 நிதியாண்டில் அதிக ஊதியம் மற்றும் பணியாளர்களை பணிக்கமர்த்துதல், அத்துடன் அலுவலக வாடகை, மின்சாரம் மற்றும் ஏனைய நிலையான நிர்வாகச் செலவுகள் அதிகரித்ததன் காரணமாக அதிகரித்துள்ளது. |
| நிதி வருமானம் | 5,254,316 | 63.21 | நிலையான வைப்பு வட்டி விகிதங்கள் அதிகரித்துள்ளன, மேலும் குறுகிய கால முதலீட்டுத் திட்டங்களும் வளர்ந்துள்ளன. |

**2.3 விகிதப் பகுப்பாய்வு**

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான கம்பனியின் குறித்த சில முக்கிய விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| **விபரம்** | **2023/24** | **2022/23** |
|---|---|---|
| செயற்பாட்டு இலாப எல்லை | 11.47% | 15.44% |
| தேறிய இலாப எல்லை | 11.25% | 25.17% |
| உரிமை மீதான திரும்பல் | 22.50% | 24.94% |
| சொத்து மீதான திரும்பல் | 12.93% | 14.33% |
| நடைமுறை விகிதம் | 2.15% | 1.83 |
| கடன் விகிதம் | 0.43 | 0.43 |
| மூலதனத்திற்கான கடன் விகிதம் | 0.74 | 0.74 |